**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள் : 04.06.2025**

**வழக்கு எண் : HMOP.71 /2023**

**சாட்சி பெயர் : திருமதி.ஜெயலெட்சுமி / RW.1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது சொந்த ஊர் பாளையங்கோட்டை ஆகும்.
2. மனுதாரருக்கு சொந்த ஊர் தென்திருப்பேரை ஆகும்.
3. எனக்கும், மனுதாரருக்கும் 30.04.2004 அன்று குரும்பூர் ஞானம் திருமண மண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது.
4. எனது திருமணத்திற்கு பின்பு நானும், எனது கணவரும் அவரது பெற்றோரின் வீட்டில் 3 மாதம் குடியிருந்து வந்தோம் .
5. எனது கணவர் வீட்டில் சுமார் 3 மாதம் குடியிருந்தேன்.
6. எனது கணவருக்கு உடன்பிறந்த சகோதரிகள் 2 நபர்கள்.
7. எனது கணவருக்கு உடன்பிறந்த ஆண்கள் யாரும் கிடையாது.
8. எனது திருமணத்திற்கு முன்பாகவே எனது கணவரின் சகோதரிகளுக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது.
9. எனது கணவரின் பெற்றோர்கள் மனுதாரரை நம்பிதான் இருந்தார்கள்.
10. எனது திருமணத்திற்கு பின்னர் 3 மாதங்கள் மனுதார் பெற்றோர்கள் வீட்டில் குடியிருந்து விட்டு மனுதாரர் கோயம்புத்துாரில் வேலை பார்த்து வந்ததால் மனுதாரரும், எதிர்மனுதாரரும் கோயம்புத்துார் சென்று விட்டார்கள் என்றால் சரிதான்.
11. எனது கணவர் கோயம்புத்துாரில் தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார்.
12. எனது மூத்த குழந்தை கீர்த்தி என்பவர் நாங்கள் கோயம்புத்துாரில் இருக்கும்போது பிறந்தார் என்றால் சரிதான்.
13. எனது 2வது குழந்தை பிறப்பதற்கு 7 மாதத்திற்கு முன்பாக எனது மாமியார் வீட்டிற்கு வந்து விட்டேன்.
14. எனது மாமனாரும், மாமியாரும் வயதான முதியவர் என்றால் சரிதான்.
15. 2009ல் எனது மாமியாருக்கு முடக்குவாதம் வந்தது என்றால் எனது திருமணத்தின்போதே எனது மாமியாருக்கு கால்வலி இருந்தது.
16. 2009ல் எனது மாமியாருக்கு முடக்குவாதம் ஏற்பட்டதாக மனுதாரர் சொல்கிறார் என்றால் சரியல்ல.
17. எனது மாமனாருக்கும் உயர் இரத்த அழுத்தத்தில் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால்

சரிதான்.

18. எனது மாமனாரும், மாமியாரும் நோய்வாய்ப்பட்டு இருந்த காரணத்தினால் மனுதாரர் கோயம்புத்தூரில் மாறுதலாகி தூத்துக்குடி வந்துவிட்டார் என்றால் சரிதான்.

19. 2009லிருந்து எனது கணவர் தூத்துக்குடிக்குதான் வேலை சென்று வந்தார் என்றால் சரிதான்.

20. மேற்படி காலக்கட்டத்தில் மாமியார் படுத்தப்படுக்கையாக நோய்வாய்ப்பட்டிருந்தார் என்றால் 2017 முதல் முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்

21. 2009முதல் 2017வரை எனது மனிதாபிமான அடிப்படையில் எனது மாமனார், மாமியாருக்கு பணிவிடை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

22. முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்ட எனது மாமனாரையும், மாமியாரையும் காலைகடன்களையும் கழிக்க வைத்துவிட்டுதான் எனது கணவர் வேலைக்கு செல்வார் என்றால் சரியல்ல.

23. அதேபோல மதிய வேளையிலும் கணவர் வேலைக்கு செய்யக்கூடிய இடத்தில் அனுமதி பெற்று விட்டு எனது மாமனார், மாமியாருக்கு செய்யவேண்டிய பணிவிடைகளை செய்துவிட்டுதான் செல்வார் என்றால் சரியல்ல.

24. திருமணம் முடிந்த நாள் முதல் 8மணி எழுந்திருப்பது, மனிதாபிமான அடிப்படையில் மாமியாருக்கு செய்யவேண்டிய பணிவிடைகளை செய்யாமல் இருந்ததாக மனுதாரர் கூறுகிறார் என்றால் சரியல்ல.

25. கீர்த்தி, கௌசிக் ஆகிய இரு குழந்தை ஆத்தூர் சண்முக சுந்தர நாடார் மேல்நிலைப்பள்ளி படித்து வந்தார் என்றால் சரிதான்.

26. கணவரையோ, கணவரின் பெற்றோரையும் சரியான கவனிக்காமல் உதாசீன படுத்தி வந்த காரணத்தினால் எனக்கும், எனது கணவருக்கும் கருத்துவேறுபாடு வந்தது என்றால் சரியல்ல.

27. கருத்து வேறுபாட்டின்காரணமாக மனுதாரர் மீது ஸ்ரீவைகுண்டம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல

28. ஸ்ரீவைகுண்டம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த மனு மீது விசாரித்தபோது மாமனார், மாமியாருக்கு செய்யவேண்டும் என்று காவல்நிலைய ஆய்வாளர் கூறிய ஆலோசனைகளை உதாசீனபடுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

29. நான் மேற்படி மனுவை முடிக்காமலும், நான் உடன்படாமலும்

சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

30. எனது குழந்தைகளை காவல்நிலையத்தில் விட்டு விட்டு பெற்றோருடன் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

31. 02.07.2017முதல் எனது குழந்தைகளை காவல்நிலையத்தில் கணவரிடம் விட்டு விட்டு பெற்றோருடன் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, எனது குழந்தைகளை என்னுடன் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள், சேர்ந்து வாழ்வதற்கு முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

32. காவல்நிலையத்திலிருந்து குழந்தைகளை அழைத்து வந்து மனுதாரர் அன்றாட வேலைகளை செய்துவந்தார் என்றால் சரியல்ல.

33. மனுதாரர் ஒரு பெண்ணிடம் தொடர்பு உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

34. இரு குழந்தைகளையும் ஒரு நாள் மனுதாரர் குடியிருந்த தென்பேரையில் விட்டு சென்றபோது 2வது குழந்தை கௌசிக்கை நானும், எனது பெற்றோரும் அத்துமீறி சென்று அழைத்து சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல.

35. இது சம்மந்தமாக மனுதாரர் ஆழ்வார்திருநகரி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

36. எனது கணவர், என் மீது கடத்தல் புகார் கொடுத்ததிலிருந்து தப்பிதற்காக மனுதாரர் மீது நானும் ஆழ்வார்திருநகரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

37. நான் கொடுத்த புகார் பொய் என்பதால்தான் ஆழ்வார்திருநகரி காவல்நிலையத்திலிருந்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

38. என் மூத்த மகளை எனது கணவர் கட்டாயப்படுத்தி தன் வசம் வைத்துள்ளார் என்றும், எனது குழந்தையை என் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று நான் ஒரு மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல.

39. மேற்படி மனுவின் அடிப்படையில் எனது குழந்தையையும், எனது கணவரையும் திருச்செந்தூர் சார்பு நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் எனது மூத்த குழந்தை கீர்த்தி வரவழைக்கப்பட்டு என் முன்பாகவும், எனது கணவர் முன்பாகவும் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

40. எனது மூத்த குழந்தை கீர்த்தி என்னுடன் வரமுடியாது என மறுத்துவிட்டார்.

41. எனது மூத்த குழந்தை கீர்த்தி இதுவரை படிக்க வைத்து கல்லூரி வரை அனுப்பி வருகிறார் என்றால் சரிதான்.

42. இருமுறை சமரச மையத்தில் விசாரிக்கப்பட்டும், எனது மூத்த குழந்தை கீர்த்தி என்னுடன் வர மறுத்துவிட்டார் என்றால் சரிதான்.

43. 2வது மகனும் எனது கட்டாயத்தின்பேரில்தான் என்னுடன் வந்தார் என்றால் சரியல்ல.

44. இந்த வழக்கில் இடைக்கால ஜீவனாம்ச கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அந்த மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் தற்போது வரை ஒவ்வொரு மாதம் ரூ.10,000/- ஜீவனாம்சம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான்.

45. எனது கணவரின் முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்ட தாயாரும் இறந்துவிட்டார்கள். அதே போல் இரத்த கொதிப்பு நோயால் பாதிக்கப்பட்ட மாமனாரும் இறந்துவிட்டார்

46. மேற்படி இருவரின் இறப்பிலும் நானும் கலந்து கொள்ளவில்லை என்றால் மாமியார் இறப்பிற்கு கலந்துகொண்டேன், மாமனார் இறப்பிற்கு கலந்துகொள்ளவில்லை.

47. மனுதாரரிடம் சேர்ந்து வாழ்வதகாக சொல்வது ஜீவனாம்ச தொகை பெறுவதற்காகவே சேர்ந்து வாழ்வதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

48. திருமணம் காலங்களில் எனது பெற்றோர் அனுவித்த நகைகள் என் வசம்தான் உள்ளது என்றால் சரியல்ல.

49. எனது நகையை ஈடுவைத்து ஈமு கோழிவளர்த்தார் என்றால் சரியல்ல

50. எனது திருமணத்திற்கு நான் செலவு செய்தேன் என்று எதிர்மனுவில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல

51. மனுதாரர் தற்போதும் எனது மூத்த குழந்தை கீர்த்தியை கவனித்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல.

52. எனது கணவர் ஒரு பெண்ணிடம் தவறாக தொடர்பு வைத்துள்ளார் என்பதை நான் ஸ்ரீவைகுண்டம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றும், அதனடிப்படையில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

53. நான் பொய்யான புகார் கொடுத்ததால்தான் காவல்நிலையத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

54. நான் எனது கடமைகளை சரியாக செய்திருந்தால் எந்த கருத்துவேறுபாடும் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல.

55. எனது கணவர் ஒரு பெண்ணிடம் தவறாக தொடர்பு வைத்துள்ள பெண் என்னை தாக்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

56. நான் எதிர்மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**